# நுண்ணுயிர்கொல்லிகளை அவதானத்துடன் கையாளுவதை உறுதிப்படுத்த எடுக்கவேண்டிய நடவடிக்கை.

கொள்கை வகுப்பாளர்கள்

மனிதர்களிலும் விலங்குகளிலும் தொற்றுக்களைக் கட்டுப்படுத்தவும் சிகிச்சையளிக்கவும் நுண்ணுயிர் கொல்லிகள் அத்தியாவசியமான மருந்துப்பொருட்களாகும்.

தற்போது இவை தாக்குத்திறனை விரைவாக இழந்து வருகின்றன.

- நுண்ணுயிர்கொல்லிகளை அளவுகடந்து அதிகமாகவும் தவறானமுறையிலும் பயன்படுத்தப்படுவது, நுண்ணுயிர்கொல்லிகளுக்கு எதிர்ப்புசக்தி உருவாக்கும் அபாயத்தினை அதிகரிக்கும்.
- நுண்ணுயிர்கொல்லிகளை மனிதனுக்கும் விலங்குகளுக்கும் மற்றும் தாவரங்களுக்கும் பயன்படுத்தும் போது துல்லியமான பாவனையினை உறுதிப்படுத்துவதன் மூலம் அவற்றின் வினைத்திறனைப் பாதுகாகத்துக் கொள்ள ஒன்றிணைந்து செயற்படுவது அவசியமாகும்.
- உலக விலங்குசுகாதார நிறுவனத்தினால் (OIE) அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நுண்ணுயிர்கொல்லிகளுக்கான சர்வதேச நியமங்களையும் தராதரங்களையும் கடைப்பிடிப்பதை உறுதிப்படுத்தும் கொள்கைகளை வகுத்து நடைமுறைப்படுத்தல் அவசியமானது.

## கொள்கை வகுப்பாளரான நீங்கள் ஆற்றவேண்டிய பங்காவது

நுண்ணுயிர்கொல்லிகளை பொறுப்புடனும் துல்லியமான முறையிலும் விலங்குகளில் பயன்படுத்துவதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

நுண்ணுயிர்கொல்லிகள் பாவனை மதிப்பீடு, ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்கள், மதிப்பீட்டு தராதரங்களைப் பயன்படுத்தி நுண்ணுயிர்கொல்லிகளுக்கு எதிரான எதிர்ப்புசக்தி உருவாக்கும் அபாயம் பற்றிய ஆய்வு, எதிர்ப்பு சக்தியுடைய பற்றீரியாக்கள் பரவுவதை மதிப்பிடல் போன்ற நடவடிக்கைகளை எடுத்தல்.

நுண்ணுயிர்கொல்லிகளுக்கான மாற்றீடுகளினை / பிரதியீடுகளை உருவாக்கும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுத்தல்.

விற்பனை செய்யப்படும் மருந்துப்பொருட்களின் பாவனை பற்றிய மதிப்பீடு, அவை சரியான முறையில் பயன்படுத்தப்படுகின்றனவா என்பனவற்றினை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.




மேலதிக விபரங்களுக்கு: www.oie-antimicrobial.com

WORLD ORGANISATION FOR ANIMAL HEALTH
*Protecting animals, preserving our future*

# நுண்ணுயிர்கொல்லிகளை அவதானத்துடன் கையாளுவதை உறுதிப்படுத்த எடுக்கவேண்டிய நடவடிக்கை.

கொள்கை வகுப்பாளர்கள்

விலங்கு வேளாண்மைத்துறைக்கான கொள்கை வகுப்பாளர்களாக விலங்குகளின் சுகாதாரத்தினையுன், மனித சுகாதாரத்தினையும் உணவு விநியோகத்தினையும் உணவு தரக்கட்டுப்பாடு மற்றும் உணவு பாதுகாப்பு என்பனவற்றினை பேணிப்பாதுகாக்க பங்காற்ற வேண்டியுள்ளது.

பண்ணையிலிருந்து உணவுமேசைவரையும் அதற்கப்பாலும் உணவுத்தரத்தினை பேண அவசியமான கொள்கைகளை வகுத்து றடைமுறைப்படுத்த உதவுவதே உங்கள் முக்கியமாக பங்களிப்பாகும்.

## கொள்கை வகுப்பாளர்களே !

1. நுண்ணுயிர்கொல்லிகளின் பொறுப்பானதும் துல்லியமானதுமமான பாவனைக்கு சட்டங்கள் மூலம் ஒத்துழைப்பு வழுங்குவதை உறுதிப்படுத்துவதுடன் நுண்ணுயிர்கொல்லி எதிர்ப்பு சக்திக்கு எதிராக போராடும் மிருக வைத்திய சேவைக்கு இச்சட்டங்களை நடைமுறைப்படுத்தும் திறனை கொண்டிருப்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

2. நுண்ணுயிர்கொல்லிகளின் பாவனையைக் கட்டுப்படுத்தும் விழிப்புணர்வு பிரச்சார நடவடிக்கைகளை ஒழுங்குசெய்ய ஆதரவளிக்க.

3. தராதரமற்ற பொருட்களை இறக்குமதி செய்தல், உற்பத்தி செய்தல், விநியோகஞ்செய்தல் என்பனவற்றினைத் தடுத்தல். சட்டவிரோத விற்பனையினை தடுத்தல் குற்றமிழைத்தவர்கள் உரியமுறையில் தண்டிக்கப்பட வேண்டும்.

4. நுண்ணுயிர்கொல்லிகள், விரைவான நோய் இனங்காணல், நோய்தடுப்பு பதார்த்தங்களின் தங்கியிருக்காது நோய்த்தடுப்பு, நோய் இனங்காணல்முறைகள், நோய்சிகிச்சை முறைகள் அபிவிருத்தி செய்யும் முறைகளை ஆராய்ச்சி செய்வதை ஆதரவளித்தல்.

5. பொறுப்பான துல்லியமான நுண்ணுயிர் கொல்லிகள் பாவனை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் பிரச்சாரங்களை ஒழுங்குபடுத்துவதை ஆதரித்தல் .

6. OIE சர்வதேச நியமங்களை அடிப்படையாக கொண்ட நுண்ணுயிர்கொல்லிகள் பாவனையினை கண்காணிக்கும் தேசியரீதியாக திட்டங்களை உருவாக்குதல்.




@ மேலதிக விபரங்களுக்கு: **www.oie-antimicrobial.com**



Funded by UK Government

WORLD ORGANISATION FOR ANIMAL HEALTH
*Protecting animals, preserving our future*